1970 மார்ச் 6]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி எண்கள் 235, 236 மாண்புமிகு அமைச்சர் அவர்களின் வேண்டுகோளுக்கு இணங்க ஒத்தி வைக்கப்படுகின்றன. கேள்வி எண் 237 பிறகு எடுத்துக் கொள்ளப்படும்.

New Rice Mill in Pandravedu village

* 238 Q.—THIRU T. MARTIN : Will the Hon. the Minister for Food and Commercial Taxes be pleased to state—

(a) whether applications are pending now before the Food Department, Government of Tamil Nadu for starting new rice mill in Pandravedu village in Palliput sub-taluk in Chingleput district ;

(b) whether any petition was sent by the villagers of Pandravedu objecting to the grant of rice mill permit very near the elementary school in the said village in September, October 1969; and

(c) if so, the particulars thereof and the steps taken thereon?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) ஆம். இரண்டு மனுக்கள் வரப்பெற்று, அவைகளின் மீது முடிவெடுக்கப்பட்டது.

(ஆ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. டி. மார்டின் : பொதுவாக ரைஸ் மில்களுக்கு லைசென்ஸ்கள் கொடுக்கிற நேரத்தில் பக்கத்தில் வீடுகள் இருக்கின்றனவா அல்லது பள்ளிகள் இருக்கின்றனவா அல்லது புதிய கட்டடங்கள் இருக்கின்றனவா என்று பார்த்து அந்தப் பக்கத்திலுள்ள இடங்களுக்குக் கொடுக்கக்கூடாது என்று சுற்றறிக்கையை அரசாங்கம் அந்த அதிகாரிகளுக்கு அனுப்புமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : இதுபோன்ற ரைஸ் மில்களுக்கு லைசென்ஸ் வழங்கும்போது மாவட்ட சுகாதார அதிகாரியுடைய அத்தாட்சி பெற்றதற்குப் பிறகுதான் வழங்கப்படுகிறது.

திரு. கே. விநாயகம் : இந்தக் குறிப்பிட்ட ரைஸ் மில் என் தொகுதியில் இருப்பதால் அரசாங்கம் எடுத்த முடிவு சரியான முடிவுதான் என்பது அரசாங்கத்திற்கு நன்கு தெரியுமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : நன்றி. தெரிந்துதான் அப்படி முடிவு எடுத்தது.

Study team of Indian Institute of Foreign Trade

* 239 Q.—THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether any study team of the Indian Institute of Foreign Trade visited this State about the 20th June 1969;

(b) if so, the details thereof; and

(c) whether the views of the Tamil Nadu Government were provided to them?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) ஆம்.

(இ) & (உ) இம் மாநிலத் தொழில் வேளாண்மைப் பொருட்களின் ஏற்றுமதி வாய்ப்புகளைப்பற்றி ஆராயும்படியும் வெளி நாட்டுச் சந்தைகளில் அதிக அளவு விற்பனையாகும் தொழில், வேளாண்மைப் பொருட்களின் ஏற்றுமதியை அதிகரிப்பதற்காகத் தகுந்த நடவடிக்கைகளை வகுக்கும்படியும் புது டில்லியிலுள்ள வெளிநாட்டு வர்த்தகம் குறித்த இந்திய நிறுவனத்தை இந்த அரசு கேட்டுக்கொண்டது. இந்த நிறுவனம் பணிந்தனுப்பிய செயற்குறிப்புகள், 1969 ஜூன்—ஜூலைத் திங்களில் தலைமைச் செயலகத்தில் நடந்த தொடர்ச்சியான பல கூட்டங்களில் தொடர்புள்ள அதிகாரிகளுடன் கலந்து விவாதிக்கப்பட்டன. இந்தக் கூட்டங்களில் தெரிவிக்கப்பட்ட கருத்துக்களின் அடிப்படையில், இந்த நிறுவனம் தனது இறுதி அறிக்கையைப் பணிந்தனுப்பியுள்ளது. இது ஆய்வில் உள்ளது.

திரு. எம். சுரேந்திரன் : நம் ராஜ்யத்திலிருந்து வெளி நாட்டு வாணிகத்திற்கு ஏற்ற பொருள்கள் எவை எவை இருக்கின்றன. எவ்வளவு எவ்வளவு ஏற்றுமதியாகிறது என்று சொல்ல முடியுமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இவைகள் ஆய்வு செய்யப்பட்டதில் கிட்டத்தட்ட 63 பொருள்கள் நம்முடைய மாநிலத்தில் இருந்து ஏற்றுமதி செய்வதற்கு வாய்ப்பிருக்கிறது என்று கொடுத்திருக்கிறார்கள். 1967–68-ம் ஆண்டு கணக்குப்படி இந்திய நாட்டின் மொத்த ஏற்றுமதி 1,200 கோடியில் நம் மாநிலத்திலிருந்து 71 கோடி வரை ஏற்றுமதி செய்யப்பட்டிருக்கிறது. இதை இன்னும் விரிவாக்குவதற்கு என்னென்ன யோசனைகள் என்பதைப் பற்றி அவர்கள் கூறியிருக்கிறார்கள். அதுபற்றி அரசாங்கம் தொழில் துறையில் சம்பந்தப்பட்டவர்களையெல்லாம் கூட்டி அழைத்துப் பேசுவதற்கு முடிவு செய்திருக்கிறது.

Visit of Thailand Trade Delegation to Tamil Nadu

* 240 Q.—Thiru G. GOMATHYSANKARA DIKSHIDAR: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether any Trade Delegation from Thailand visited the State around 22nd August 1969; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) ஆம்.

(இ) தாய்லாந்து பொருளாதார அலுவல்கள் அமைச்சர் மேதகு திரு. புன்காகு அத்தசோன் அவர்களும், இந்திய அரசு நல்லுறவு அதிகாரி, தாய்லாந்துத் தூதாக அலுவலகர் ஒருவர் உள்ளிட்ட ஒன்பது பேர் அடங்கிய குழு ஒன்றும் 1969-ம் ஆண்டு ஆகஸ்டு 22-ம் நாளன்று புதுடில்லியிலிருந்து சென்னை வந்து